பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

பாவிகளை
இரட்சிக்க
கிறிஸ்து இயேசு
உலகத்தில் வந்தார்.

I தீமோத்தேயு 1:15

## செய்தி மலர் டிசம்பர் - 2024

மலர் : 20 இதழ் : 21



சபை ஊழியரின்
அன்பு மடல்



# கிறிஸ்துமஸ் செய்தி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே கடந்த 11 மாதங்களாக வழி நடத்தின தேவன் இந்த வருடத்தின் கடைசி மாதத்திலும் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவாராக. வெற்றி கரமாக இந்த வருடத்தையும் நிறைவடையச் செய்வாராக.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறந்தபொழுது சில குறிப்பிட்ட வார்த்தைகள் சொல்லப்பட்டது. அவைகளில் சிலவற்றை கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

## 1. இயேசு என்று பெயரிடுவாயாக...

மரியாளுக்கு கணவராக உறுதி செய்யப்பட்ட யோசேப்பு மரியாள் கடவுளின் கிருபையினால் கர்ப்பவதியானாள் என்று கேள்விப்பட்டவுடன் அவளை அவமானப்படுத்த மனதில்லாமல் இரகசியமாய் அவளை தள்ளி விட யோசனையாயிருந்தான். அப்பொழுது சொப்பனத்தில் தூதன் தோன்றி உன் மனைவியாகிய மரியாளை சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே. அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அந்தக் குழந்தைக்கு இயேசு பெயரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். (மத்-1:18-22)

ஆம் பிரியமானவர்களே, நம் பாவங்களை மன்னிக்கிற அதிகாரம் இயேசுவுக்கு மட்டுமே உண்டு.

காரணம் நம் பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக கடவுள் இயேசு என்ற பெயரில் உலகத்திற்கு வந்தார். பேதுரு சொன்னார் அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்க்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான். (அப்–4:132)

நாம் நம் பாவங்களை அறிக்கை செய்து, மனங் கசந்து அழுது இயேசுவிடம் வந்து அறிக்கை செய்யும்பொழுது நாம் பாவ மன்னிப்பை பெறுகிறோம். பாவ தோஷம் நம்மை விட்டு நீங்கிப் போய் விடுகிறது. (1–யோவா–1:9)

## 2. இம்மானுவேல் என்று பெயரிடுவாயாக...

தீர்க்கதரிசி சகரியா சொன்னார், இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்கள். இம்மானுவேல் என்பதற்கு தேவன் உம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம். ஆம் பிரியமானவர்களே, இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று மோசேயினிடத்தில் தேவன் சொன்னார். (யாத்–3:14) நம்முடைய சுக துக்கங்களை தோளோடு தோள் நின்று பகிர்ந்து கொள்ளும்படியாக இயேசு நம்மோடிருக்கிறார். அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார். பாதாளம் அவரை மேற்கொள்ள முடியாது. கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலும் இருந்து கண்ணீரை தமது ஜனத்தின் நிந்தையை பூமியில் இராதபடிக்கு முற்றிலும் நீக்கி விடுவார். கர்த்தரே இதை சொன்னார். (ஏசாயா–25:8) அதனால் நமக்கு யாரும் இல்லையே என்று கவலைப்படவேண்டாம். எல்லா சூழ்நிலையிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடிருக்கிறார். வாழ்வோ, சாவோ, லாபமோ, நஷ்டமோ இருளோ, வெளிச்சமோ, உயர்வோ, தாழ்வோ எல்லா சூழ்நிலையிலும் தேவன் நம்மோடிருக்கிறார். அல்லேலூயா.

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவருடைய நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு எனப்படும்.

## 3. புற ஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளி...

ஏசாயா தீர்க்கதரிசி சொன்னார் புறஜாதியாருக்கு நியாயத்தை அறிவிப்பார். அவருடைய நாமத்தின் மேல் புறஜாதியார்

நம்பிக்கையாயிருப்பார்கள் என்று (மத்-12:17-21) சிமியோன் என்னும் வயதான முதியவர் நீதியும் தேவ பக்தியும் உள்ளவராய் இயேசுவின் பிறப்பிற்காக காத்திருந்தார். அவரைக் கண்டவுடன் இயேசு பாலகனை கையிலேந்தி "புற ஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சணயத்தை என் கண்கள் கண்டது" என்றான்.

ஆம் பிரியமானவர்களே, இயேசு இஸ்ரவேலுக்கு மகிமையாக வந்தார். அதே சமயத்தில் புறஜாதிகளுக்கு ஒளியாக வந்தார். இயேசு பேதுருவுக்கு சொன்னது போல நீ முதலில் நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரபடுத்து (லூக்- 22:32) அதே போல இஸ்ரவேல் மக்கள் சுவிசேஷத்தை அறிந்த பிறகு அதை புறஜாதிகளுக்கும் சொல்ல வேண்டும் என்பது ஆண்டவருடைய சித்தம். அதனால்தான் கொர்நேலியு என்ற தேவ பக்தியுள்ள புறஜாதி நூற்றுக்கு அதிபதியினடத்திற்கு பேதுருவை அனுப்பி பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து ஞானஸ்நானம் கொடுக்க செய்தார். அதனால்தான் புறஜாதிகளாகிய நாமும் ஆவிக்குரிய இஸ்ரவேலராக இயேசுவிடமிருந்து எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்கிறோம்.

## 4. மனுஷர் மேல் பிரியமுண்டாவதாக...

அவ்வேளையில் பரமசேனையின் திரள் அந்த தூதனுடனே தோன்றி "உன்னத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமுண்டாவதாக" என்று சொல்லி தேவனை துதித்தார்கள். ஆம் பிரியமானவர்களே, நம்மையே நாம் விரும்பாத சூழ்நிலையிலே தேவாதி தேவன் மனுஷர் மேல் வைத்த அளவுகடந்த பிரியத்தினால் மனிதனாக இறங்கி வந்தார். மோசேயின் பத்து கட்டளைகளை சுருக்கி வெறும் இரண்டு கட்டளையாக எளிதான முறையில் நமக்கு கொடுத்தார். பரனை நேசி உன்னைப் போல் பிறனை நேசி என்று கற்றுக் கொடுத்தார். அந்த நாட்களுக்கு பின்பு " நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து அவர்களுடைய இருதயங்கில் அவைகளை எழுதுவேன். நான் அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனங்களாயிருப்பாகள். நான் அவர்கள் அநியாயங்களை கிருபையாய் மன்னித்து அவர்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எபி-8:10-13)

## 5. எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி . . .

இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ண வந்த யோவான் ஸ்நானகன் சொன்னார். உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. இயேசு ஜனங்களை நோக்கி நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான். என்றார். (யோவா-8:12) நாம் எப்படிப்பட்ட இருள் வழியாய் கடந்து போனாலும் இயேசு நமக்கு ஒளியாய் இருக்கிறார். நோய், சாபம், பாவம், வறுமை இப்படி எந்த இருளாயிருந்தாலும் இயேசுவை விசுவாசித்து அவரிடம் வரும்போது எல்லாம் ஒளியாக மாறும்.

கர்த்தர் தாமே நம்மை ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து இயேசு இந்த உலகத்திறக்கு வந்ததினால் கிடைக்கப்பெற்ற மேற்சொன்ன அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்று மகிழ்ச்சியோடு கூட முடிக்க தேவன் அருளள் புரிவாராக.

தேவன் கிருபை உங்களோடிருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

## தேவ செய்தி

### தெளிந்தவர்களாய் இருங்கள்

ஏசாயா-28: 7,8 ஆனாலும் இவர்களும் திராட்சை ரசத்திற்காய் மயங்கி, மது பானத்தால் வழி தப்பி போகிறார்கள். ஆசாரியனும், தீர்க்கதரிசியும், மதுபானத்தால் மதி மயங்கி திராட்சை ரசத்தினால் விழுங்கப்பட்டு சாராயத்தினால் வழி தப்பி தீர்க்கதரிசனத்தால் மோசம் போய் நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள். போஜன பீடங்களெல்லாம் வாந்தியினாலும் அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது. சுத்தமான இடமில்லை, என்று வாசிக்கிறோம்.

1-பேதுரு-1:12,13 தங்கள் நிமித்தமல்ல நமது நிமித்தமே இவைகளை தெரிவித்தார்கள் என்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது. பரலோகத்திலிருந்து அனுப்பபட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்கு சுவிசேஷத்தை பிரசிங்கத்தவர்களை கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது. இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.

ஆகையால் நீங்கள் உங்கள் மனதின் அரையைக்கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்று வாசிக்கிறோம்.

தெளிந்தவர்களாயிருக்க வேண்டும் : மனதின் அரையைக் கட்டிக்கொண்டு சுயக்கட்டுபாடு உள்ளவர்களாக இருக்க வேண்டும். self control இருக்க வேண்டும்.

சுயக்கட்டுபாடு என்பதற்கு கிரேக்கத்தில் நீ:.போ என்று அர்த்தம், நீ:.போ என்றால் Apstrain from wine மதுபானத்தின் ஆதிக்கத்தில் இருக்கக்கூடாது.

திராட்சைரசம் என்பதற்கு கிரேக்கத்தில் ஒயினோஸ் என்று அர்த்தம். அப்படி என்றால் Give of bubbles of gas நுரைத்து வெளிவருவது என்று அர்த்தம். சின்ன காரியம் என்றாலும் அப்படியே பொங்கி அந்த இடத்தையே ஒரு வழி ஆக்கிடுவாங்க. சுயக்கட்டுபாடு இருக்காது.

புலம்பல்- 3:22,23 நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள். நாம் காலை தோறும் தேவ சமூகத்தில் அமர்ந்து நமது கிருபைகளை புதுப்பித்துக்கொண்டேயிருக்கும் போது எந்த ஒரு நூதன உபதேசம் வந்தாலும் நம்மை மோசப்படுத்த முடியாது. ஆனால் இன்றைக்கு அநேகரின் வார்த்தை பொங்கி வழிகிறதாக காணப்படுகிறது.

உன்-5:4,6 என் நேசர் தமது கையைக் கதவுத் துவாரத்தின் வழியாய் நீட்டினார். அப்பொழுது என் உள்ளம் அவர் நிமித்தம் பொங்கினது. 6-ம் வசனம் என் நேசருக்கு கதவைத் திறந்தேன் என் நேசரோ இல்லை போய்விட்டார் என்று வாசிக்கிறோம். பொங்கி வழிகிறவர்களாக இருந்தால் கர்த்தரின் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுபவர்களாக இருக்க முடியாது.

சங்கீ-23:5 என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. பொங்கி வழிந்தால் என்ன ஆகும் என்றால் பால் பொங்கின பிறப்பாடு பாத்திரத்தில் ஒன்றும் இருக்காது. நிரம்பி வழிந்தால் அந்த பாத்திரம் அப்போதும் நிறைவாகவே இருக்கும் அது

மாத்திரமல்ல. வெறுமையான பாத்திரங்களையும் நிறைக்கும். 2-ராஜா-4:1-6 எலிசா விதவை ஸ்திரீயின் வீட்டில் எண்ணையை பெருகப்பண்ணும் போது எண்ணெய் நிரம்பி வழியும்போது அது ஊரில் உள்ள அநேக வெறும் பாத்திரங்களை நிரப்பிற்று. எதுவரைக்கும் வேறு பாத்திரங்கள் இல்லாத வரைக்கும். இன்றைக்கு அநேகர் பொங்குகிறவர்களாக, சுயக்கட்டுபாடு இல்லாதவர்களாய் தங்கள் பரிசுத்த ஜீவியத்தை, ஊழியத்தை கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திராட்சை ரசம் எப்படி நாளுக்கு நாள் புளித்துக் கொண்டேயிருக்குமோ அப்படியே இருக்கிறார்கள். நான் சரியாக இருக்கிறேனா? என் ஆவி சரியாக இருக்கிறதா? என் ஆவியில் கட்டுபாடு இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். நீதி-25:28தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான் என்று பார்க்கிறோம்.

சுயக்கட்டுபாடு நமக்கு இல்லாவிட்டால் காணப்படும் காரியங்கள்.

## 1. தோல்விகள் வரும்...

1-ராஜா-26:16-21 சீரியாவின் ராஜா பெனாதத் இஸ்ரவேல் ராஜா ஆகாபிற்கு விரோதமாக யுத்தம் செய்ய வருகிறான். சீரியா ராஜா பெனாதத்திற்கு உதவியாக 32 தேசத்தின் ராஜாக்கள் வருகிறார்கள். இஸ்ரவேல் ராஜா ஆகாபிடம் 232 படைத் தலைவர்கள் 7000 இராணுவ வீரர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் இந்த சீரியா ராஜாவிடம் 38 ராஜாக்களின் சேனை இருக்கிற இவன் என்ன செய்கிறான் யுத்தம் செய்ய பாளையத்திற்கு போனால் அங்கே மதிய வேளையில் எல்லோரும் குடித்து வெறித்திருக்கிறார்கள். நடந்தது என்ன? பெனாதத் ஒரு சில குதிரை வீரரோடு உயிர் தப்பி ஓடினான் என்று வாசிக்கிறோம்.

## 2. மரணத்தை கொண்டு வரும்...

லேவி-10:1,2 பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூப கலத்தை எடுத்து அவைகளில் அக்கினியையும் அதின் மேல் தூப வர்க்கத்தையும் போட்டு கர்த்தர் தங்களுக்கு கட்டளையிட்டதாக அந்நிய அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள். அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள். பின்பு என்றால் அதற்கு முன்பு என்ன நடந்தது? லேவி-9:24 கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு பலிபீடத்தின் மேலிருந்த சர்வாங்க தகன பலியையும் கொழுப்பையும் எரித்துவிட்டது. நாதாபும் அபியூவும் ஏன் அந்நிய அக்கினியை கொண்டு

போனார்கள் தெரியுமா? லேவி–10:8,9 கர்த்தர் ஆரோனை நோக்கி நீயும் உன்னோடு கூட உன் குமாரரும் சாகாதிருக்க வேண்டுமானால் ஆசாரிப்புக் கூடாரத்திற்கு பிரவேசிக்கும் போது திராட்சை ரசத்தையும் மதுவையும் குடிக்க வேண்டாம் என்று கர்த்தர் சொன்னார், ஆனால் ஆரோனின் குமாராகிய நாதாபும் அபியூவும் குடித்து பொங்கி ஆசரிப்பு கூடாரத்திற்குள் சென்றதால் மரித்தார்கள் என்று பார்க்கிறோம்.

## 3. வாக்கு வாதங்கள் வரும்...

நீதி–4:17 அவர்கள் ஆகாமியத்தின் அப்பத்தைப் புசித்து கொடுமையின் இரசத்தை குடிக்கிறார்கள். கொடுமை என்றால் வயலன்ஸ் தேவையற்ற வாக்குவாதம். ஆவிக்குரிய வாழ்க்கையில் வாக்குவாதம் இருக்கவே கூடாது. 1–தீமோ–6:4 ல் வாக்குவாதம் ஒரு நோய். வாக்கு வாதத்தை தேவன் விரும்புவது கிடையாது என்று பார்க்கிறோம். ஆதி–26:18–20 ஆபிரகாம் வெட்டின துரவுகளை பெலிஸ்தர்கள் தூர்த்து போட்டார்கள். ஈசாக்கு அதை திரும்பவும் தோண்டி நீருற்றை கண்ட போது கேராரூர் மேய்ப்பர்கள் தங்களுடையது என்று வாக்குவாதம் பண்ணினார்கள். ஈசாக்கு ஒன்றும் சொல்லாமல் வேறு இடம் சென்று தோண்டினான் திரும்பவும் அது தங்களுடையது என்று சொல்லி வாக்குவாதம் பண்ணினார்கள். ஈசாக்கு வாக்கு வாதம் பண்ணவேயில்லை. இன்றைக்கு சபையாக இருக்கட்டும் குடும்பமாக இருக்கட்டும் எங்கு வாக்குவாதம் இருக்கிறதோ அங்கு பிரச்சனைகள் தானாய் வரும்.

## 4. பரியாசம் செய்யும்...

நீதி–20:1 திராட்சைரசம் பரியாசம் செய்யும் மதுபானம் அமளிபண்ணும் அதினால் மயங்குகிறவன் ஞானவானல்ல. சங்கீ–1:1 பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராதே என்று வேதம் சொல்கிறது. நாமே பரியாசம் பண்ணுகிறவர்களாக இருந்தால் எப்படி? கிண்டல் கேலி அக்கரமம், ஏன் என்று கேட்டால் விளையாட்டுக்கு சொன்னேன் என்பார்கள் சுயகட்டுபாடு இல்லாதவர்கள் பரியாசம் செய்வார்கள். மதுபானம் அமளிப்பன்னும் அதினால் மயங்குகிறவன் ஞானவானல்ல, அப்படி என்றால் முட்டால் என்று அர்த்தம்.

ஞானம் என்பதற்க்கு எபிரேய வார்த்தை – கோக்மா. கோக்மா என்றால் To live a Godly life in an God, தேவன் இல்லாத உலகத்தில் அவருக்கு பிரியமாக வாழ்வது என்று அர்த்தம். நீதி–1:7 கர்த்தருக்கு பயப்படுதே ஞானத்தின் ஆரம்பம். சுயகட்டுபாடு இல்லாதவர்கள் தேவனுக்கு பிரியமாக வாழ மாட்டார்கள்.

## 5. தரித்திரத்தை கொண்டு வரும்...

நீதி–23:21 குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள். தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும். சுயகட்டுப்பாடாக இல்லாவிட்டால் தரித்திரம் வரும் அது எப்படி வருமென்றால், நீதி–6:11 உன் தரித்திரம் வழிபோக்கனை போலவும், உன் வறுமை ஆயுதமனிந்தவன் போலவும் வரும். ஒரு வேளை நான் பணக்காரன் என்னிடம் செல்வம் நிறைய உண்டு சொன்னாலும், பொங்குகிறவர்களாக இருந்தால் ஆவிக்குரிய தரித்திரம் கண்டிப்பாக வரும்.

## 6. தாறுமாறனவைகளை பேசும்...

நீதி–23:33 உன் கண்கள் பரஸ்தீரிகளை நோக்கும் உன் உள்ளம் தாறுமாறனவைகளைப் பேசும், சுயக்கட்டுபாடு இல்லாத கண்கள் தாறுமாறானவைகளை பேசும். மாம்ச இச்சைகளோடு சம்பந்தப்பட்ட வார்த்தைகள் தவறான வார்த்தைகளை உள்ளத்திலிருந்து பேசுவார்கள். மத்–12:34 இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். பொங்குகிறவர்களின் இருதயமே கேடான காரியங்களை சிந்திக்கிறதாக இருக்கும்.

## 7. நியாயத்தை புரட்டுவார்கள்...

நீதி–31:5 மதுபானம் பண்ணினால் அவர்கள் நியாயப் பிரமாணத்தை மறந்து சிறுமைப் படுகிறவர்களுடைய நியாயத்தை புரட்டுவார்கள். நியாயத்தை ஆளுக்கேற்றபடி இடத்திற்கேற்றபடி மாற்றுவார்கள். ஆண்டவர் சொல்கிறார். மத்–5: 37 உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லை என்றும் சொல், இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் என்று.

சுயக்கட்டுபாடு இல்லை என்றால் இந்த 7 காரியங்கள் கண்டிப்பாக வரும். தோல்வி, மரணம், வாக்குவாதம், பரியாசம், தரித்திரம், தாறுமாறானவைகள், நியாயத்தை புரட்டுதல்.

நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து தேவனிடத்தில் திரும்புவோம். கர்த்தர் கிருபை நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதிப்பதாக ஆமென்.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்,
ஆண்டனி

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி-12:2 )

சகோ.பீட்டர் ராமச்சந்திரன்
செல்வி. ரேச்சல் வினோத்
செல்வன்.சாமுவேல் பால் பெஸ்டஸ்
செல்வி.நயோமி வேலு ராமர்
சகோதரி.சசிகலா வேலு ராமர்
சகோதரி. மேரி ஹானி ஷீபா ராணி வெங்கடேஷ்
செல்வன்.ஜோயல் ஐஸ்டின்
சகோதரி.விஜயா ஆண்டனி
சகோ.பால் ராஜேஷ்
சகோதரி.கிளாடிஸ் பாப்பி சிவக்குமார்
சகோ.சாம்சுந்தர்.
சகோதரி.சசிரேகா சத்தீஷ்குமார்
செல்வன்,டெரில் கேட்சன் ஸ்டீபன் ஜெயக்குமார்
செல்வி.ரெய்ன்ஸ் ரோஸி ஆரோக்கியதாஸ்
சகோதரி.ஜீனா சத்தீஷ்குமார்
செல்வி.ஜெர்ஸிலின் நியா ஜோன்ஸ்
சகோதரி.சிவகுமாரி ஜஸ்டின்
செல்வன்.சுபாஷ் சந்திரபோஸ் பாலமுருகன்

செல்வி. சாயா ஸ்டாலின் சுனில் வின்ஸ்
செல்வி.அத்சா செல்வராஜ்
செல்வன். ஜான்சன் ராஜவேல்
சகோ.சிவக்குமார்
செல்வன்.பெஞ்சமின் வேலுராமர்
செல்வி.இவ்லின் ஸ்டெபி சகாய டார்வின்
சகோதரி.லில்லி ப்ளோரா ஆரோக்கியதாஸ்
சகோ.செல்வராஜ்
சகோ.விபின்
சகோ.ஆல்வின் முத்தையா
சகோதரி.ஜெனிபா கனீஷ் ஜோஸ்வா
சகோ.பால்ராஜ் சேகரன்
செல்வன்.கதிர் ஆண்டனி
சகோ.எட்வின் சாம் ஞானதுரை
செல்வி.கிரேஸ்லின் எட்வின் சாம் ஞானதுரை
செல்வி.ஸ்டெனா ஸ்டாலின் சுனில் வின்ஸ்
சகோதரி.ஜாஸ்மின் மெர்சி பென்சாம்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி.திரு தாஸ்
திருமதி.திரு ஜமிலா ஜோய்ஸ்
திருமதி.திரு கிறிஸ்டோபர் தேவராஜ்
திருமதி.திரு வேலுராமர்
திருமதி.திரு. T. ஸ்டீபன்
திருமதி.திரு R.சத்தீஷ்
திருமதி.திரு சாமுவேல் விஸ்வாநதன்

திருமதி.திரு பிரசாத் சுந்தரேசன்
திருமதி.திரு ஜான்சன்
திருமதி.திரு ஆல்வின் முத்தையா
திருமதி.திரு ஜெபசிங்
திருமதி.திரு ஜெய்சாம் டேனியேல்
திருமதி.திரு செல்வராஜ்
திருமதி.திரு பால் அறிவுச்சுடர்
திருமதி.திரு பென்சாம்
திருமதி.திரு. ப்ரெட்சிலின் ஜாக்சன்

# 2024 – டிசம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/12/2024 | பாஸ்டர்.நைஜல் சாலமன் (EL-ROI Ministries, Vellore) | |
| 08/12/2024 | சகோ. சுபின் சிங் | சகோ. பிராங்ளின் |
| 15/12/2024 | சகோ. சாம் சுந்தர் | சகோ. ரவிஜான் பீட்டர் |
| 22/12/2024 | சகோ. தாமஸ் | சகோ. பிரசாத் |
| 29/12/2024 | சகோ. பக்த ராஜ் | சகோ.சுகுமார் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/12/2024 | பிறசபையின் பாடல் ஆராதனை | |
| 13/12/2024 | சகோ. வேலுராமர் | சகோ. ஆண்டனி |
| 20/12/2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/12/2024 | சகோ. இயேசு ரத்தினம் | சகோ. ஆரோக்கியதாஸ் |

## ஆராதனை ஒழுங்குகள்

### சங்கிலி தொடர் ஜெபம்

05/12/2024 மாலை 6:00 முதல் 06/12/2024 காலை 6:00 வரை

**25/12/2024 அன்று கிறிஸ்துமஸ் ஆராதனை**

இடம் – அஹமதி தமிழ் திருச்சபை

( நேரம் பின்னர் அறிவிக்கப்படும் )

**31/12/2024 அன்று விழிப்பு இரவு ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**01/01/2025 அன்று புது வருட ஆராதனை**

இடம் – அஹமதி தமிழ் திருச்சபை

( நேரம் பின்னர் அறிவிக்கப்படும் )

# 2024 டிசம்பர் மாதத்திற்கான வேத வினா!



**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்று தேவன் எந்த சபைக்கு கூறுகிறார்?
2. தள்ளப்பட்ட பெரிய வலுசர்ப்பத்தின் பெயர் என்ன?
3. எதனால் தேவாலயம் நிறைந்தது?
4. எதன் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாய் இருந்தது?
5. நகரத்து மதிலின் 12 அஸ்திபாரங்களும் எவ்வித இரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன?
6. சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகத்தை வணங்கியவர்கள் யார்?
7. யோவான் எதற்காக மிகவும் அழுதார்?
8. பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டபோது அங்கு காணப்பட்டது என்ன?
9. சிவப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் ஏறியிருந்த ஸ்திரீயின் நெற்றியில் எழுதியிருந்த நாமம் என்ன?
10. இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்களின் தொகை எவ்வளவு?
11. அக்கினிக் கடலில் தள்ளப்பட்டவை எவை?
12. யோவான் சிறு புஸ்தகத்தை தூதனுடைய கையிலிருந்து வாங்கி புசித்தபோது அது எப்படி இருந்தது?
13. ஆட்டுக்குட்டியானவரும் அவரோடே கூட பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்தவர்களும் எந்த மலையின் மேல் நின்றார்கள்? நின்றார்கள்?
14. மங்கின நிறமுள்ள குதிரையின் மேல் ஏறியிருந்தவனுக்கு என்ன பெயர்? அவன் பின் சென்றது என்ன?
15. யேசபேலுடைய வேசித்தன ஆவி உள்ள சபை எது?

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

விடைகளை வருகின்ற 20-12-2024 க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு
அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
“ வெளிபடுத்தின விசேஷம் ”
அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

## 2024 – நவம்பர் மாத வேத வினாவுக்கு விடைகள்

1. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் ( மாற்கு 16:16 )
2. வேத வாக்கியங்கள் ( மாற்கு 14:49 )
3. வனாந்திரத்திற்கு ( மாற்கு 1:12 )
4. தரித்திரர் ( மாற்கு 14:7 )
5. தேவனுடைய குமாரன் ( மாற்கு 1:1 )
6. ஜெப வீடு , கள்ளர்குகை ( மாற்கு 11:17 )
7. யோவான் ஸ்நானகன், எலியா, தீர்க்கதரிசிகளில் ஒருவர் ( மாற்கு 8:28 )
8. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது ( மாற்கு 5:34 )
9. அல்பேயுவின் குமாரனாகிய லேவி ( மாற்கு 2:14,15 )
10. பிதா ( மாற்கு 13:32 )
11. – – –
12. ஜலத்தினால் ( மாற்கு 1:8 )
13. யோவான் ( மாற்கு 11:32 )
14. தேவனுடைய ராஜ்ஜியம் ( மாற்கு 1:15 )
15. ஞானஸ்நானம் மாற்கு 16:16 )

## 2024– நவம்பர் மாத வேத வினாவுக்கு

## பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்

SIS. பியூலா மெர்சி பால்

SIS. நித்யா ஜோன்ஸ்

SIS.ஜான்சி ராணி

SIS. சாந்தி

SIS. மரிய குளோரி தாஸ்

SIS.ஜீனா சதீஷ்குமார்

SIS. பத்மினி வர்க்கீஸ்

SIS. ஜெஸ்லட் வர்க்கீஸ்

## சகோதரிகள் பகுதி

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

மீண்டுமாக இச்செய்தி மலரின் வாயிலாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. கடந்த மாதங்கள் முழுவதும் நம்மைப் பாதுகாத்து நடத்தி வந்த தேவனுக்கு முதலில் நாம் நன்றி செலுத்துவோம்.

இந்த மாதம் டிசம்பர் நாம் இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளை கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடஇருக்கின்றோம். இயேசப்பா நம் உள்ளத்திலும் நம்முடைய இல்லத்திலும் பிறக்க வேண்டியது மிக அவசியமாகும். நம்முடைய வீட்டையும் நம் இருதயத்தையும் நாம் அவருக்கு திறந்து கொடுக்க வேண்டும். "இதோ நான் வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவேன் அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்."(வெளி-3:20)

உன் இருதயத்தை எனக்குத் தா...

நீதி-3:1-என் மகனே என் போதகத்தை மறவாதே உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக்கடவது, இயேசுவின் போதனைகளை நாம் ஏற்றுக்கொண்டு, நம்முடைய இருதயத்தை நாம் அவருக்கு கொடுக்க வேண்டியது மிக அவசியமானதாகும். அவருடைய கற்பனைகளையும் நாம் காத்து நடக்க வேண்டும்.

ஏழைக்கு இரங்குதல்...

நீதி-19:17-ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான், அவன் கொடுத்ததை அவர் திரும்பக்கொடுப்பார்"

கிறிஸ்மஸ் என்பதன் அர்த்தமே நாம் நிச்சயமாக ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும் அவ்வாறு நாம் செய்யும்போது இயேசப்பா வானத்தின் பலகணிகளைத் திறந்து நம்மை இடம் கொள்ளாமற் போகுமட்டும் அவர் ஆசீர்வதிக்கின்றார். நம் உள்ளத்தையும் இல்லத்தையும் அவருக்கு நாம் திறந்து கொடுத்து ஏழைகளுக்கு உதவுவதே நம் தலையாகிய நோக்கமாகக் கொண்டு இயேசுவின் பிறந்த நாளை நாம் சிறப்பாக கொண்டாடுவோமா? கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதித்து நடத்துவாராக.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரி,
**A.பியூலா மெர்ஸி பால்**

# வாலிபர் பகுதி

" தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் " (1-யோவா-5:4)

## 1. ஜெயம் தரும் கர்த்தர் யார் ஜெயம் பெற முடியும்...

அன்பான சகோதர சகோதரிகளே வேதத்தில் சொல்லப்பட்டது போலவே நாம் தேவனால் பிறந்தவர்களாக இருந்தால் மட்டுமே ஜெயமான வாழ்க்கை வாழ்ந்து பரலோகம் செல்ல முடியும் எப்படி தேவனால் பிறப்பது என்பதை யோவான்-3:5,7 -ல் இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்திலே பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து அதிசயப்பட வேண்டாம்.இந்த வசனம் நமக்கு தெளிவாக கூறுகிறது வாலிப பிள்ளைகளே எனவே ஞானஸ்நானம் பெற வேண்டும்.

## 2. எப்படி ஜெயம் பெற முடியும்...

விசுவாசத்தின் மூலம் நாம் ஜெயம் பெறமுடியும். 1-யோவா-5:4 நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். ஒரு நல்ல விசுவாசமான மனிதர் தேவனுக்காக வாழ்ந்து கொண்டிருந்தார் திடீரென அவருக்கு சரீரம் பெலவீனம் அடைந்தார் அவருடைய குடும்பத்தார் அவரை அந்த ஊரில் உள்ள மிகப்பெரிய மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். (அவருக்கு இரண்டு பிள்ளைகள் ஒரு பெண் ஒரு ஆண்) குடும்பத்தார் அங்கலாய்த்து கொண்டிருந்தனர். டாக்டர் என்ன சொல்லுவார் என்று சற்று நேரத்தில் வந்து உங்கள் கணவருக்கு எய்ட்ஸ் இருக்கிறது அவர் இன்னும் மூன்று மாதத்தில் இறந்து விடுவார் என்று கூறின மறு வினாடி குடும்பத்தார் இருதயம் உடைந்து போனது. மனைவி வரை தகாத வார்த்தையால் திட்டினாள். பிள்ளைகள் இவர் ஒரு தகப்பனா என்று வெறுத்து தள்ளினார்கள். தாய் தந்தை இவன் எனது பிள்ளை இல்லை என தூக்கி எறிந்தார்கள் இரண்டு மாதம்மருத்துவ மனயைில் இருந்தார். அவருடைய கம்பெனி பணம் கொடுக்கவில்லை குடும்பத்தார் கைவிட்டனர். டாக்டர் ஐயா நீங்கள் இன்னும் ஒரு வாரம்தான் உயிர் வாழ முடியும் எனவே நாளை வெளியே போய்விடுங்கள் என கூறி விட்டனர்.

மனம் உடைந்த அந்த நபர் இயேசுவை நோக்கி நான் எப்படி வாழ்ந்தேன் என்பது உமக்கு தெரியும் நான் உம்மை விசுவாசிக்கிறேன் என்னை சுகம் படுத்தும் என்று அழுதுகொண்டே தூங்கி விட்டார். திடீரென கண் விழித்த அவர் முன்பு அவரது குடும்பம் அவரது கம்பெனி கூடி நின்றார்கள். டாக்டர் அங்கும் இங்கும் ஓடி கொண்டு இருக்க இவருக்கு அவ்வளவு தான் போல என்று

நினைக்கும் போதே அனைவரும் அவரிடத்தில் அழுது கொண்டே மன்னிப்பு கேட்டனர். அவர் ஆச்சரியப்பட மருத்துவர் நீங்கள் பூரண சுகமடைந்து விட்டதாக கூறினார்.

பார்த்தீங்களா அவருடைய விசுவாசம் முடிந்த வாழ்வையே ஜெயமாக மாற்றியது. 1-கொரி-15:54-ல் மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்ற வார்த்தை நிறைவேறும். எனவே அன்பு சகோதர சகோதரிகளே இயேசு

இன்று உங்களை பார்த்து கூறுவது ஜெயம் பெறுகிறவர்களாய் நீங்கள் மாற வேண்டும் என்று உங்களில் யாராகிலும் தோல்வியான வாழ்வில் வாழ்கின்ற நிலையில் இருந்தால் இயேசு ஜெயம் தர வல்லவராய் இருக்கிறார்.

## 3. எதனால் ஜெயம் கிடைக்கும்...

ஜெயத்தால் ஜெயம் கிடைக்கும் 1-சாமு-1:15-ல் அன்னாள் என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்தீரி நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். இப்படி இவர்கள் தேவனிடத்தில் ஜெபித்ததால் தேவன் ஜெபத்தைக் கேட்டு ஜெயத்தை கொடுத்தார். சாமு-1:20-ல் சில நாள் சென்ற பின்பு அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி, அவனுக்க சாமுவேல் என்று பேரிட்டாள். என்பதை இந்த வசனம் கூறுகிறது.

எனவே பிள்ளைகளே ஜெப வாழ்க்கையை விட்டு விடாமல் இடைவிடாமல் ஜெபிப்போம் ஜெயம் பெறுவோம். தாவீதின் ஜெப வாழ்க்கையே இன்று வரை நமக்கு அவரை நினைவு படுத்துகிறது. ஏனெனில் அவர் சிறியவனாய் இருக்கும் போதும் மிகப்பெரிய ராஜாவாக இருக்கும் போதும் தன் பெலத்தை நம்பாமல் தன் படையை நம்பாமல் தன் அறிவை நம்பாமல் கர்த்தரையே விசுவாசித்து ஜெபம் செய்கிறார். எனவே தான் 2-சாமு-5:19-ல் பெலிஸ்தருக்கு விரோதப் போகலாமா, அவர்களை என் கையிலே ஒப்புக்கொடுப்பீரா என்று தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்த போது கர்த்தர் போ பெலிஸ்தரை உன் கையில் நிச்சயமாய் ஒப்புக்கொடுப்பேன் என்று தாவீதுக்குச் சொன்னார். இந்த வசனத்தின் படி அவர் ஜெயம் எடுக்கிறார்.

நாமும் நமது வாழ்க்கையில் இவரை போன்று கர்த்தரை முன்பாக வைத்து முழு விசுவாசத்தோடு ஜெபம் செய்யும்போது அவர் நமக்கு நமது பண கஷ்டம், வியாதிகள், சாபம், தரித்திரம், இழப்பு, நஷ்டம் இது போன்ற காரியங்களில் நமக்கும் தாவீது ராஜாவுக்கும் ஜெயம் அளித்தது போல நமக்கும் இவைகளில் இருந்து ஜெயம் தர இயேசு கிறிஸ்து வல்லவராக இருக்கிறார். ஜெபம் இல்லாத விடு என பழமொழி உண்டு அங்கே பாதுகாப்பு இருக்காது. அது போலவே ஜெபம் இல்லா வீடும் பாதுகாப்பு இல்லாதுதான் எனவே பிள்ளைகளே நாம் எல்லோரும் கர்த்தரை விசவாசிப்போம், இயேசுவில் பிறப்போம், தேவனிடத்தில் ஜெபிப்போம், மாம்ச உலகத்தை ஜெயிப்போம்.


வாலிபம் இயேசுவுக்கே.

# Kids Corner





**DerilGodson**

**Affia Arokyadhass**



# A Story of James




Moral: Don't be like James
Don't try to fool
any one.

Wealth gained by dishonesty
will be diminished, But
he who gathers by labor
will increase. Proverbs: 13:11

By: D.J. Amish

D.J. Amish

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில






















ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

# செயற்குழு உறுப்பினர்கள்

<u>முதன்மை ஊழியர்</u>

**Bro.S.ஸ்டாலின்**

Ph.66021072 - 96760452

<u>செயலாளர்</u>

**Bro.S.சுகுமார்**

Ph.99837646

<u>பொருளாளர்</u>

**Bro.S.சிவக்குமார்**

Ph.99837646

<u>பெண்கள் ஐக்கிய தலைவி</u>

**Sis.செலின் டேவிட்**

Ph.65967170

<u>வாலிப ஐக்கிய தலைவர்</u>

**Bro.சுபின்சிங்**

Ph.65197164

Merry Christmas

AND HAPPY NEW YEAR-2025

